கீழப்பழவூர் கிராமத்தில் மின்சாரம்

* **441 கேள்வி—திரு. எஸ். ராமசாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம் கீழப்பழவூர் அரிசன தெருவிற்கு மின்விளக்கு போடுவதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தேசிய நெருக்கடி காரணமாக, கீழப்பழவூர் பஞ்சாயத்தில் ஹரிஜனத் தெருவுக்கு மின் விளக்கு விஸ்தரிக்கும் வேலை மற்ற வேலைகளுடன் தென் சென்னை மின்சார சப்ளை கார்ப்பொரேஷன் லிமிடெட் ஸ்தாபனத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. 1963-64-ம் ஆண்டுக்குரிய தன் வேலைத் திட்டத்தில் இவ்வேலையைச் சேர்த்துக் கொள்வது குறித்து இக் கார்ப்பொரேஷன் இப்போது ஆலோசித்து வருகிறது.

மின்விசை போர்டு

* **442 கேள்வி— திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மின்சார போர்டிற்கு ஆண்டுதோறும் தேவைப்படும் L.T. Transformers எத்தனை?

(இ) 1963-ல் Transformers இல்லாமல் வேலை தாமதப்படுத்தப்பட்டுள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(உ) அரசாங்கம் மின்சார போர்டின் நிர்வாகத்தில் ஒரு Transformer Factory ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சுமார் 1,500.

(இ) இல்லை.

(உ) இல்லை.

(a) About 1,500.

(b) No.

(c) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், இந்த மின்சார விஸ்தரிப்பு செய்வதில் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல் டிரான்ஸ்பார்மர் இல்லாமல் காலதாமதம் ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? குறிப்பாக என்னுடைய கிராமத்தில் மட்டும் 17 இடங்களில், டிரான்ஸ்பார்மர் இல்லாமல் வேலை நடக்காமல் இருக்கிறது. ஆகவே நமது மின்சார போர்டுக்கு வேண்டிய டிரான்ஸ்பார்மர்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: காலதாமதம் ஆவதாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், கடந்த ஆறு மாதங்களுக்குள்ளாக 993 கிராமங்களுக்கு மின் விளக்கு வசதி